1979 மார்ச் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் அதிலே கொஞ்சம் உணர்ச்சி வயப்பட்டுச் சொன்னார்கள். அவர்கள் குறிப்பிட்ட பெயர்களை எல்லாம் நீக்கிவிடும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : எதிர்க்கட்சித் தலைவர் உணர்ச்சி வயப்பட்டார் என்று தாங்கள் சொன்னதையும் நீக்கவேண்டும்.

[முற்பகல் 11.10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆறுமுகம், உட்காருங்கள்

திரு. சி. ஆறுமுகம் : எதிர்க்கட்சித் தலைவர் அவ்வளவு பொறுப்பு இல்லாது உணர்ச்சி வசப்பட்டு விட்டாரோ, அதற்கு நீங்கள் தீர்ப்புக் கொடுக்கிறீர்களோ?

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, திரு. ஆறுமுகம் பொறுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனக்கு உணர்ச்சி இருப்பது ஒன்றும் குறைவானதல்ல உணர்ச்சி இருப்பவன் தான் மனிதன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்களே சொல்லி விட்டார்கள்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அமைச்சர் அவர்கள் விளக்கத்திலே ஒரு பெயரைச் சொன்னார்கள். அந்தப் பெயரையும் எடுத்துவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் சொன்னதில் உள்ள அந்தப் பெயரையும் அவைக்குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த அவையை ஒத்தி வைத்து விவாதிப்பதற்குத் தேவையில்லை என்பதால் அதற்கு அனுமதி மறுக்கிறேன்.

4. அமைச்சரின் அறிக்கை

சிம்கோ நிறுவன தகராறு குறித்து தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, 7-3-1979 அன்று சட்டப் பேரவையின் அவைமுன்னவர் அவர்கள் அறிவித்தபடி, 8—3—1979 அன்று மாலை அனைத்துக் கட்சித் தலைவர்கள், அனைத்துத் தொழிற் சங்கத் தலைவர்கள் கொண்ட கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர்

அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் சிம்கோ மீட்டர் தொழிற்சாலை பற்றிப்பல தலைவர்களும் தங்கள் கருத்துக்களை எடுத்து வைத்த பின்னர், இப்பிரச்சினையை சட்டத்திற்குட்பட்டும் தொழிலாளர்களின் நன்மையைக் கருத்திற் கொண்டும் அரசு எடுக்கும் முடிவை ஏற்றுக் கொள்வது என்றும் முடிவு எடுத்தனர். மாண்புமிகு முதல்வர் அவர்களும் சம்பந்தப் பட்டவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி விரைவில் தொழிற் சாலை திறப்பதற்கு தக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார்கள்.

அதன்படி முதலமைச்சர் அவர்கள் நடத்திய பேச்சு வார்த்தையின் பயனாக திருச்சி சிம்கோ மீட்டர் தொழிற்சாலை 16–3–1979 அன்று கதவடைப்பு நீக்கித் திறக்கப்படும் என்ற நற்செய்தியை இப்பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கு முதல்படியாக இன்று 14–3–1979 அல்லது நாளை முற்பகல் ஐ.என்.டி.யு.சி. தொழிற்சங்கம் உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்துள்ள உரிமை மனுவை (ரிட் பெட்டிஷன்) திரும்பப் பெறும். 15-3-1979 அன்று மாலை தொழிலாளர்கட்கு கீழ்க்கண்ட சலுகைகள் வழங்கும் ஒப்பந்தம் திருச்சி தொழிலாளர் அலுவலர் முன்பு கையெழுத்திடப்படும்:—

''1. நிர்வாகம் இன்று தினக்கூலி ரூ. 4.50 பெறும் தொழிலாளர்களில் 102 பேரை நிரந்தரத் தொழிலாளி ஆக 1-3-1979 முதல் நியமிக்கும். இதனால் அந்தத் தொழிலாளிகள் ஒவ்வொருவருக்கும் மாதம் சுமார் ரூ. 75.00 வரை அதிக வருமானம் கிடைக்கும்.

2. இதர கேஷுவல் தொழிலாளர்களுக்குத் தினக் கூலி ரூ. 4.50-க்கு மேலாக ரூ. 1.50 கூடுதலாகக் கொடுக்கப்படும். ஆக தினம் ரூ. 6-00பெறுவர்.

3. அடுத்த கட்டமாக 1-5-1979 முதல் மேலும் 113 தொழிலாளர்களை நிர்வாகம் நிரந்தரமாக்கும்.''

இவை மட்டுமின்றி நிர்வாகம் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்குக் கீழ்க்கண்ட வாக்குறுதிகளும் எழுத்து மூலம் அளித்திருக்கிறது:—

''1. தேவைக் கேற்ப 5-11-1978-ல் பணியாற்றிக் கொண்டிருந்த கேஷுவல் தொழிலாளிகள் அனைவருக்கும் வேலை கொடுத்த பின்னரே, வேறு தொழிலாளிகள் பணிக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள்.

2. தற்காலிக வேலை நீக்கத்தில் இருக்கும் 28 தொழிலாளிகள் தவிர மற்ற அனைத்துத் தொழிலாளிகளும் 16-3-1979ல் இருந்து ஒரு வாரத்திற்குள் தங்கள் பணியில் சேர்ந்துவிட வேண்டும். இது வெளியூரில் உள்ள தொழிலாளிகட்குப் பயன் படும் ஓர் வாய்ப்பு.

1979 மார்ச் 14] [திரு. எஸ். இராகவானந்தம்]

3. வேலை நிறுத்தத்தைத் தூண்டி வன்முறையில் ஈடுபட்டதற்காகத் தற்காலிக வேலை நீக்கத்தில் இருக்கும் 28 தொழிலாளிகட்கு சஸ்பென்ஷன் காலத்து ஊதியமாக பாதி சம்பளம் கொடுக்கப்படும். அவர்கள் மீது குற்றச்சாட்டு பிறப்பிக்கப்பட்டு விதிகளின்படி விசாரணை நடத்தப்படும். அந்த விசாரணையில் அவர்கள் மீது சாட்டப்பட்ட குற்றம் நிரூபணம் ஆகவில்லை என்றால் அவர்கள் மீண்டும் முழு ஊதியத்துடன் பணிக்கு எடுத்துக் கொள்ளப்படுவார்கள். குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டவர்கள் மீது தண்டனை விதிப்பதற்கு முன் தனது தீர்ப்பை நிர்வாகம் ஓர் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி முன் (ஆர்பிட்ரேஷன்) வைக்கும். அவருடைய தீர்ப்பு அனைவரையும் கட்டுப்படுத்தும்.

4. வேலையில் சேர்ந்த நிரந்தரத் தொழிலாளிகள் அனைவருக்கும் தொழிற்சாலை திறந்த 8 நாட்கள் ஆனவுடன் ரூ. 300 முன்பணமாக வழங்கப்படும். இத் தொகை அதை அடுத்து வரும் 12 மாத ஊதியங்களில் தவணை முறையில் பிடித்தம் செய்யப்படும்.

5. வேலை நிறுத்தம் செய்த காலம் அந்தந்தத் தொழிலாளிக்கு விடுப்பு உள்ள அளவுக்கு ஈடு செய்யப்படும்.''

மாண்புமிகு முதலமைச்சர் முயற்சியால் அவர்கள் அமைத்துத் தந்த இந்த நல்ல ஒப்பந்தத்தை அனைத்துத் தொழிலாளர்களும் நிர்வாகமும் மன நிறைவுடன் ஏற்றுக் கொள்வார்கள் என நம்புகிறேன். வேலை நிறுத்தம் செய்துள்ள தொழிலாளர்களை வேலைக்குத் திரும்பும்படிப் பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்,

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இது சம்பந்தமாக ஒன்று. அவர் சொன்னதிலிருந்து ஒரு கிளாரிபிகேஷன் வேண்டும். 8ஆம் தேதிக் கூட்டத்திலே முதலமைச்சருடைய முடிவு இதுவரையிலே கட்டுப்படுத்தும் என்ற முறையிலேயே ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது. அது கரெக்ட் பொசிஷன் அல்ல. முதலமைச்சரவர்கள் கடைசியிலே இரண்டு ஆல்டர்நேட்டிவை வைத்தார்கள். ஒன்று, ''ஆர்பிட்டரேஷன் முன்னால் விடலாமா அல்லது அரசாங்கமே தலையிட்டு முடித்துக் கொள்ளலாமா என்று வைத்தார்கள். நாங்கள் ''செகண்ட் ஆல்டர்நேட்டிவை அக்செப்ட் பண்ணுகிறோம்'' என்று சொன்னோம்.

இரண்டு அஷ்யூரன்ஸை கவர்ன்மெண்ட் மீறியிருக்கிறது, ஒன்று, எக்காரணத்தைக்கொண்டும் விக்டிமைசேஷன் இருக்காது என்று பேச்சுவார்த்தையில் வலியுறுத்திக்கொண்டு வரப்பட்டது. நார்மலாக ஒரு ஸ்ட்ரைக் முடிகிறபோது என்ன செய்ய வேண்டும்? 6ஆம் தேதி நடந்தது, 5ஆம் தேதி ''as on 5-11-1978

status-quo ante''. மறுபடியும் ரெஸ்டார் செய்வது என்பது எப்பொழுதும் வரக்கூடிய விஷயம். ஆனால் அமைச்சர் கொடுத்த ஸ்டேட்மெண்டில் அவர்கள் அப்படியே வேலைக்கு எடுக்கப்பட மாட்டார்கள். 5ஆம் தேதி வேலையிலிருந்தவர்கள், 6ஆம் தேதி ஸ்ட்ரைக்கில் ஈடுபட்டவர்கள் அப்படியே இருக்க மாட்டார்கள், ஜனவரியில் 100 பேர் வேலை நிறுத்தத்தில் கலந்துகொண்டவர்கள் இப்பொழுது எடுக்கப்பட மாட்டார்கள், மேனேஜ்மெண்ட் தேவையான அளவில் நினைத்த பொழுதுதான் எடுப்பார்கள். That means persons III will be victimised.

நம்பர் 2 அஷ்யூரன்ஸில் வரக்கூடிய விஷயம், 28 பேரிலே இது வல்லாமல் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது, ரூ. 4.50 என்பது நியாயம் அல்ல, ரூ. 6 என்று ஆக்கியதற்குப்பிறகு தொழிலாளர்களின் கோரிக்கையின் எசென்ஸை ஒத்துக்கொண்ட பிறகு அதற்காகப் போராடிய தொழிலாளர்கள்மீது மறுபடியும் வன்முறை என்று சொல்லி 28 பேர்கள் மீது நடவடிக்கை எடுப்பது என்பது ரியல் விக்டிமைசேஷன். அதையும் நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.

கடைசியாகச் சொல்ல விரும்புவது, நிதியமைச்சரின் முன்னால் நடந்திருக்கும் அனைத்துக் கட்சி கூட்டத்தில் 'ஃப்ரேம் ஒர்க்' எல்லோராலும் ஒத்துக்கொள்ளப்பட்டது. அதற்குள்தான் பேச்சுவார்த்தை நடத்தி முடிக்க வேண்டுமென்பது. நிரந்தரத் தொழிலாளர்களுக்கும் நிவாரணம் அளிக்க வேண்டுமென்பது கம்ப்ளீட்டாக விடப்பட்டிருக்கிறது.

இவைகளின்மீது எங்களுக்குக் கடுமையான ஆட்சேபம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் உமாநாத் அவர்கள் அரசாங்கம் செய்ய வேண்டுமென்று சொல்லியதை வற்புறுத்தும் வகையில் இந்தச் சட்டமன்றத்திலேயிருந்து வெளிநடப்பு செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மார்க்சீஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.)

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர், அன்றைக்கு நடந்த சர்வ கட்சிக் கூட்டத்தில் நாங்களும் கலந்துகொண்டோம். ஒரு ஸ்ட்ரைக் நடந்தால்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 82ஆவது விதியின் கீழ் அறிக்கை கொடுத்த பிறகு அதன்மேல் விவாதம் கிடையாது. உறுப்பினரவர்கள் முதலில் விதியைப் பார்க்க வேண்டும். திரு. உமாநாத் அவர்கள் சொன்னார்களே என்பதற்காக அதை விட்டேன்.

1979 மார்ச் 14]

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, அந்தக் கூட்டத்தில் நாங்கள் கலந்து கொண்டோம். ஒரு வேலை நிறுத்தம் வந்தால் அதன்மீது முதலமைச்சர் தலையிட்டு பேசித் தீர்த்த பின்னர், வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்டவர்கள், 5-11-1979-க்கு முன்னால் எவ்வளவுபேர் வேலையில் இருந்தார் களோ (குறுக்கீடு) 5–11-1978ஆம் தேதிக்கு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரவர்கள் நேரத்தை வீணாக்க வேண்டாம். பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்று நேரத்தை நிறைய எடுத்துக்கொள்வது சரியல்ல.

திரு. மு. அம்பிகாபதி : 5-11-1978ஆம் தேதிக்கு முன்னால், வேலைநிறுத்தம் துவங்குகின்ற தேதிக்கு முன் வேலையிலிருந்த அனைவருக்கும் இந்த அறிவிப்பின்மீது உத்தரவாதம் இல்லை, முதலமைச்சர் தலையிட்டபிறகும், வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட வர்களைப் பழி வாங்கலாம் என்ற நிலைமையிருந்தால் இந்த அறிவிப்பை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொல்லி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நாங்களும் வெளிநடப்பு செய்கிறோம்.

(இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.)

[முற்பகல் 11–20]

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளின் சார்பிலும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்து, அமைச்சர் இங்கு வெளியிட்ட அறிக்கை தங்களுக்கு மன நிறைவு தருவதாக இல்லையென்று கூறியிருக்கிறார்கள். அதற்குப் பிறகாவது அவர்களுடைய உணர்வுகளை மதித்து மீண்டும் மறுபரிசீலனை செய்து இந்தப் பழி வாங்குகின்ற நிலை யிலே இருந்து தொழிலாளிகளை விடுவிக்க அமைச்சரவர்கள் மேற்கொண்டு முயற்சிகளைத் தேடுவாரா என்று நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

தலைவரவர்களே, பதில் கூட சொல்லாமல் * அலட்சியம் காட்டுவதால், நாங்கள் கூட வெளிநடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்.)

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1979 மார்ச் 14]

திரு. ஜே. ஜேம்ஸ் : பாயின்ட் ஆப் ஆர்டர், தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே 82-வது விதியின் அடிப்படையில் வைத்துள்ள அறிக்கையில், தற்காலிகமாக 28 தொழிலாளர்களை, மீண்டும் இப்பொழுது வேலையில் அமர்த்துவதாக இல்லையென்று கூறினார்கள். உண்மையிலே, முதலாளி—தொழிலாளி உறவு நல்ல முறையில் இருக்கவேண்டும். அந்தத் தொழில் நிறுவனம் நல்ல முறையில் செயல்படவேண்டுமென்று சொன்னால், அந்தத் தொழிலாளிகளை, மீண்டும் மற்ற தொழிலாளிகளைப் போல் உடனடியாக வேலையில் அமர்த்தவேண்டும். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் கொடுக்க வேண்டுமென்று கேட்டதற்கு அமைச்சரவர்கள் விருப்பம் தெரிவிக்காத காரணத்தால் எங்கள் கட்சியும் வெளிநடப்பு செய்கிறது.

(ஜனதா கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர்)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சார், ஆன் எ பாய்ன்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு அமைச்சரவர்கள் விதி 82-ன் கீழ் ஒரு அறிக்கை தாக்கல் செய்திருக்கிறார். எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் மறுபடியும் அதிலே கேள்விகள் கேட்டு அமைச்சரவர்கள விளக்கம் தர வேண்டுமென்று வற்புறுத்துவது விதிகளுக்கு முரண்பாடானது. ஆகவே, அமைச்சரவர்கள் அறிக்கையை தாக்கல் செய்த பிறகு விதிகளின்படி அந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லாமல் அமர்ந்திருந்தார்கள். ஆனால் அதை * என்றோ, அலட்சியம் என்றோ சொல்வது முறையானதா என்பதைத் தங்களிடம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 82-வது விதியின் கீழ் அறிக்கை தாக்கல் செய்த பிறகு, கேள்விகளை அனுமதிக்கவே கூடாது என்பது எனக்குத் தெரியும். ஆனால், இருக்கிற பிரச்னை தொழிலாளிகளைப் பற்றியது என்பதால், அதை நான் அனுமதித்தேன், அடுத்தது, * என்ற வார்த்தையை நீக்கும்படி நான் உத்தரவிடுகிறேன்.

41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து கவன ஈர்ப்பு—திரு. தீ. சு. நல்லதம்பி—இருக்கையில் இல்லை.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே,* என்ற வார்த்தை இருப்பதிலே தவறில்லை, இருக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதை முதலிலே நீக்கியாகி விட்டது, மறுபடியும் அதைச்சேர்க்க வேண்டாம்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.